1970 மார்ச் 21]

.. சிறு தொழில் உற்பத்திப் பொருள்கள்

* 432 வினா—திரு. பெ. மலைச்சாமி : மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மதுரை, திருச்சிராப்பள்ளி ஆகிய நகரங்களில் சிறு தொழில்களின் நிலையான பொருட்காட்சிகளை ஏற்படுத்த அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளதா ?

(இ) ஆம் எனில், அரசு இதனால் என்ன பயனை எதிர்பார்க்கின்றது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) புதிய தொழிற்சாலைகளை நிறுவுவதற்குரிய வாய்ப்புகள், கிடைக்கக் கூடிய நிதி உதவி வகைகள், ஒவ்வொரு மாவட்டத்திலும் சிறு தொழில்களைப் பெருக்குவதற்கான வாய்ப்புகள், அவற்றை உண்மையில் எந்த அளவுக்கு மேம்படுத்த முடியும் என்பது பற்றிய தொழிலறிவு ஆகியவை பற்றி ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள சிறு தொழில் முனைவர்களுக்கும், பொது மக்களுக்கும் ஆலோசனைகள் கூற வகை செய்யப்பட வேண்டும் என்று கருதப்படுகிறது. மேற்சொன்னவை குறித்து சரியான தகவல்களை அளிப்பதற்கும் தனியார் துறையையும், அரசுத் துறையையும் சேர்ந்த தொழிற் பிரிவுகளின் உற்பத்திப் பொருள்களை இந்த பொருட்காட்சிகளில் விளம்பரப்படுத்தி வைக்கக் கருதப்பட்டுள்ளது. திருச்சிராப்பள்ளியிலும், மதுரையிலும் நிலையான பொருட்காட்சிகளை அமைப்பதன் மூலம் மேற்சொன்ன குறிக்கோள்களை எய்த முடியும் என்பதுடன், அந்தந்த மாவட்டத்தில் உருவாகி வரும் மேம்பாடுகளை விரிவாக விளக்கிக் காட்டவும் உதவியாயிருக்கும். பொருட்களின் விற்பனைக்குரிய வாய்ப்புகளை மேம்படுத்துவதற்கான வாயில்களாகவும், அந்தப் பொருட்காட்சிகள் அமையும். மேலும், சிறு தொழில் அதிபர்கள் தொழில் தகவல்களைப் பரிமாறிக் கொள்வதில் குறிப்பாக, ஏற்றுமதி வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்வதற்கு இந்தப் பொருட்காட்சிகள் வாய்ப்புகள் அளிக்கும்.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழகத்தில் எந்த எந்த நகரங்களில் நிலையான பொருட்காட்சி சாலைகள் இருக்கின்றன என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அரசாங்கம் திருச்சிராப்பள்ளியிலும், மதுரையிலும் நிலையான பொருட்காட்சியை நடத்துவதற்கு அனுமதி தந்திருக்கிறது. அதை நடத்துவதற்கான ஏற்பாடுகளை தொழில் துறை இயக்குநர் செய்து வருகிறார்.